**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 06-04-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-04-06 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-04-07 | 2023-04-08 | 2023-04-09 | 2023-04-10 | 2023-04-11 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 35.0 | 35.0 | 36.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 28.0 | 28.0 | 28.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4.0 | 6.0 | 4.0 | 4.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 290 | 250 | 200 | 270 | 320 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 3 | 1 | 0 | 1 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்புள்ளது. வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 80% ஆகவும், பகல் நேரங்களில் 40% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34.0-36.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27.0-28.0 °C ஆகவும் இருக்கும். காற்று மணிக்கு 4-6 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

09.04.2023 முதல் 15.04.2023 வரை தமிழ்நாட்டில் மழை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாகவும், அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட குறைவாகவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் வாரங்களில் வறண்ட வானிலை காணப்படுவதால், விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 25% WG 100 கிராம்/எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். |
| எள் ( கிங்கேல்லி / டில்) | 1. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக எள் பயிரில் குருத்து இலைப்பிணைக்கும் புழுவின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த குயினால்பாஸ் 25 EC 2000 மிலி/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக எள் பயிரில் வேரழுகல் நோயின் தாக்கம் தென்பட்ட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த மண்ணில் பேசிலாஸ் சப்டிலிஸ் அல்லது டிரைக்கோடெர்மா ஆஸ்பெரெல்லம் 2.5 கிலோ/ எக்டர் என்ற அளவில் 50 கிலோ தொழு உரம் அல்லது மணலுடன் கலந்து விதைத்த 30 வது நாள் இட வேண்டும். நோய் தாக்கிய பகுதியில் கார்பன்டசிம் 1.0 கிராம்/லிட்டர் என்ற அளவில் கலந்து மண்ணை நனைக்க வேண்டும். |
| கரும்பு | கரும்பு பயிரில் மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்க் தாக்கம் காணப்படுகிறது. இதனால் பயிர்களின் வளர்ச்சி குன்றி மற்றும் குருத்து காய்ந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த இமிடாக்ளோப்ரிட் 17.8 SL 0.6 மிலி/லி அல்லது கார்பெண்டாசிம் 1.0 கி/ லி என்ற அளவில் தெளிக்கலாம். |
| உளுந்து | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக உளுந்து பயிரில் மஞ்சள் மஞ்சள் தேமல் நோய் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. மஞ்சள் தேமல் நோய் தாக்கிய இளம் இலைகளில் ஆங்காங்கே மஞ்சள் நிற புள்ளிகள் ஆரம்பத்தில் தோன்றும். புதிதாக தோன்றும் இலைகளில் ஒழுங்கற்ற மஞ்சள் மற்றும் பச்சை திட்டுக்கள் மாறிமாறி காணப்படும். புள்ளிகளின் அளவு அதிகரித்து, முடிவில் இலை முழுவதும் மஞ்சள் நிறமாக மாறிவிடும். பயிர்கள் குட்டையான வளர்ச்சியுடன், காலந்தாழ்த்தி முதிர்ச்சி அடைதல், மிகக்குறைந்த அளவு பூக்கள் மற்றும் காய்கள் உற்பத்தியை பாதிக்கும். இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 எண்ணிக்கை என்ற அளவில் மஞ்சள் நிற ஒட்டு பொறிகளை வைக்க வேண்டும். இயற்கை முறையில் கட்டுப்படுத்த இலைவழி தெளிப்பாக |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | ஏக்கருக்கு நொச்சி இலை வடிசாறு 10 சதவீதம் 30 வது நாள் தெளிக்க வேண்டும் அல்லது ஏக்கருக்கு இமிடாகுளோப்ரிட் 17.8 எஸ்.எல் 100 மிலி என்ற அளவில் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | 1. பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றிகட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். 2. வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள்/ பொறிவண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. 3. அதிகபாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும். |